



# மாநகர வட்டாரங்களில் மரங்கள் சாயும் சம்பவங்கள் மாநகர மன்றத்தின் உறுதியான நடவடிக்கை தேவை

கோலாலம்பூர், ஜூன் 4- கடுமையான புயல் மழையில் மரங்கள் வேரோடு சாய்ந்து மக்களுக்கும் சொத்துடைமைகளுக்கும் சேதம் ஏற்படுத்துகின்ற சம்பவங்களை மாநகர மன்றம் தடுக்க வேண்டும் என ஒரு சுற்றுச் சூழல் அமைப்பு கேட்டுக் கொண்டது.

மிக அண்மைக் காலமாக மாநகரைச் சுற்றிலும் மழை நேரத்தின் போது மரங்கள் விழுந்து பெரும் சேதங்களை ஏற்படுத்தும் சம்பவங்கள் குறித்து கோலாலம்பூரை பாதுகாப்போம் என்ற இயக்கத்தின் தலைவர் எம்.அலி கூறினார்.

இந்த சம்பவத்தை தனியாக அணுகக் கூடாது. எல்லா அம்சங்களையும் கூர்ந்து பரிசீலித்து இதற்கான தீர்வுகளை காண வேண்டும். பெரும்பாலும் தவறான திட்ட அமைப்பு தான் இதற்கு காரணம். சுற்றுச்சூழலை புறக்கணித்து செயல்படும் பல்வேறு திட்டங்களால் இவ்வாறு நிகழ்கிறது.

கடந்த மே 7 ஆம் தேதி கன மழையில் பெரிய மரம் விழுந்து 47 வயது ஆடவர் பலியானார். ஜாலான் சுல்தான் இஸ்மாயிலில் இந்த துயரச் சம்பவம் நிகழ்ந்தது.

இதில் 26 வயது இளைஞரும் மற்றொரு வயதான நபரும் காயமடைந்தனர். அந்த மரம் 17 வாகனங்களை சேதப்படுத்தியது. மாநகரில் உள்ள மரங்களின் ஆபத்து நிலையை மாநகர மன்றம் உரிய கவனம் எடுத்து இப்பிரச்சினையை தீர்க்கும் என்று கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலேஹா முஸ்தாபா கூறினார்.

சில வேளைகளில் வெளியே மரங்கள் சிறப்பாக தோற்றமளிக்கும். ஆனால் உள்ளே அவை சிதைந்திருக்கலாம். கடுமையான மழைக்காற்றில் அவை சாய்ந்து பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இதற்கு ஒரு புதிய வழிமுறைகளை மாநகர மன்றம் ஆராயும் என்றார் அவர். தொடர்ச்சியாக மாநகர சுற்றுவட்டாரத்தில் இந்த சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

பல இடங்களில் மரங்களின் கிளைகளை வெட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மண்ணின் தோழர்கள் கழகத்தின் தலைவர் மீனாட்சி ராமன் பேசுகையில் இது போன்ற சம்பவங்களை அதிகாரிகள் மிகத் தீவிரமாக கண்காணிக்க வேண்டும் என்றார்.

மாறி வரும் பருவ நிலை சூழ்நிலைகளை அதிகாரிகள் அணுக்கமாக கண்காணிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.